RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s222615

# தமிழ் - மராத்திசமூகம் ஓர் ஒப்பீடு

**மு. முத்து [அ, *], மா. ரெத்தினேஸ்வரி [அ]**

[அ] தமிழ் உயராய்வு மையம், ஸ்ரீசேவுகன் அண்ணாமலை கல்லூரி, தேவகோட்டை-630303, தமிழ்நாடு, இந்தியா

# A Comparison of Tamil-Marathi Society

**M. Muthu [a, *], M. Rethineswari [a]**

[a] Department of Tamil, Sree Sevugan Annamalai College, Devakottai-630303, Tamil Nadu, India

* Corresponding Author:
muthuguna84@gmail.com

Received: 26-09-2022
Revised: 08-11-2022
Accepted: 15-11-2022
Published: 05-12-2022

Check for updates

## ABSTRACT

This article is about the views of scholars on society, although many scholars express many different views, society is defined as "a mass of people" in the dictionary. As social institutions Tamil and Marathi people's lifestyle, customs, family structure, worship of God, diet and traditional products are also included. Even though the world is turning into a mechanical world, it is new to describe the people's lifestyle beautifully. Art form and literary style exhibit innovation, and the expression of society plays an important role. The growth and upsurge witnessed by literature are innumerable, and innovations reflect the changes in people's lives. The purpose of this article is to highlight the society, its relationships and customs as depicted in the epics of Tamil and Marathi.

**Keywords:** Community Description, Scholars Views on Society, Commentary on Community Dietion Aries, Social Organization, Relationship

## முன்னுரை

உலகமே இயந்திர உலகிற்கு மாறிவந்தாலும் மக்களின் வாழ்க்கை முறையினை அழகாக எடுத்துக் கூறுவது புதினமே ஆகும். கலை வடிவமும் இலக்கிய நயமும் கொண்ட புதின இலக்கியம் கண்ட வளர்ச்சியும், எழுச்சியும் எண்ணிலடங்காதவையாகும். மக்களின் வாழ்க்கையில் ஏற்படும் மாறுதல்களை புதினங்கள் வெளிக்காட்டுகின்றன. அதிலும் சமுகத்தின் வெளிப்பாடு முக்கிய இடம்பெறுகின்றன. தமிழ் மற்றும் மராத்தி காப்பியங்களில் வெளிக்காட்டும் சமுதாயத்தைப் பற்றியும், அதன் உறவுமுறைகள், பழக்க வழக்கங்கள் ஆகியவற்றை பற்றியும் எடுத்துக்கூறுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## சமூகம்-விளக்கம்

சமூகம் என்பது ஒருவாழ்கை முறையினைக் குறிப்பதாகும். மனிதன் விலங்கின் நிலையிலிருந்து மாறி ஒருவரை ஒருவர் உறவு கொள்ளும் நிலையில் சமூகம் உருவாகின்றது. மொழி, அரசியல், நாட்டுப்பற்று, சமயம், பண்பாடு, தொழில், கலாச்சாரம், முதலியவற்றின் அடிப்படையில் சேர்ந்து வாழும் மக்களின் கூட்டமே சமூகம் எனப்படும். மனித இனங்கள் ஏற்படுத்தி கொண்ட வாழ்க்கை அமைப்புமுறையே சமூகமாகும். ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியில் நீண்ட காலமாக ஒன்று சேர்ந்து வாழ்வதற்காக மக்கள் கூட்டம் ஏற்படுத்திக்கொள்ளும் அமைப்பு சமூகம் என்று கூறப்படுகின்றது.

## சமூகம் பற்றிய அறிஞர்களின் கருத்துகள்

பலதரப்பட்ட மக்களைக் கொண்ட ஓர் அமைப்பிற்குச் சமூகம் என்று பெயர். இதுதனி மனிதன், குடும்பம், சாதி, சமயம், அரசியல், தொழில்கள், தெய்வங்கள், வழிபாடுகள், விழாக்கள், அணிகலன்கள், உணவுமுறை, புழங்கு பொருட்கள், கால்நடைகள், கருவிகள் போன்றவற்றை உள்ளடக்கியதாகும். ஆனால் சமூகம் பற்றி பல்வேறு அறிஞர்களின் கருத்துக்களைக் கீழ்வருமாறு காண்போம்.

“சமூகம் என்பது ஒருவரையறுத்த தொடர்ச்சியான வாழ்க்கை முறை அல்லது பண்பாட்டைப் பெற்றுத்தமக்குள் ஒற்றுமை உடையவராக வாழும் மக்களைக் கொண்டது” என்று டேவிட்டிரஸ்லர் கூறுகிறார் (Varadarajan, 1947). “ஒரு வட்டாரத்தில் ஒரு பொது வாழ்க்கை நெறியைப் பின்பற்றிக் கூட்டமாக வாழும் மக்கள் தொகுதியை சமூகம் என்று அழைப்பார்” என்கிறார் அர்னால்டுகிரீன் (Saraswathi Ramnath, 1932). “சமூகம், சமுதாயம், குழுதாயம் ஆகிய சொற்கள் ஒருபொருளைக் குறிக்கின்றன. மக்கள் குழுக்களை குறிக்க ‘கம்யூனிட்டி’ (Community) ‘சொசைட்டி’ (Society) என்ற இரு ஆங்கிலம் சொற்கள் இருக்கின்றன. ‘கம்யூனிட்டி’ என்பது ஒரேகுலத்தைச் சோந்த மக்கள் குழுக்களைக் குறிப்பது. ‘சொசைட்டி’ என்பது பல்வேறு குலத்தைச் சார்ந்த மக்கள் குழுவை உள்ளடக்கியது” என்கிறார் நா.பிச்சமூர்த்தி. “சமூகம் என்பது பலதரப்பட்ட மக்களைக் கொண்ட ஒருகுழு ஆகும். சமூகம் கல், மண், சுண்ணாம்பு முதலியவற்றால் உருவாக்கபட்ட ஓர் இல்லம் போல் பலதரப்பட்ட மக்களால் உருவாக்கபட்டது” என்கிறார் அகிலன்.

## சமூகம் - அகராதியில் தரும் விளக்கம்

ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியில் நீண்ட காலமாக ஒன்று சேர்ந்து வாழ்வதற்காக மக்கள் கூட்டம் ஏற்படுத்திக் கொள்ளும் அமைப்பைச் சமூகம் என்று கூறுகின்றனர். அச்சமூகத்திற்கு அகராதிகள் சிறப்பான முறையில் விளக்கம் கூறுகின்றன. தமிழ் சொல்லகராதி சமூகம் என்ற சொல்லுக்கு “மக்கள்திரள்” என்று பொருள் தருகிறது. “பெரியலிப்கோ அகராதி சமூதாயம், பொதுநல நிறுவனம், சங்கம், சமூகம், சமூகத்தில் வசதிமிக்கவர்கள்” என்ற விளக்கத்தைத் தருகிறது.

## சமூக நிறுவனங்கள்

ஒரு நல்ல இலக்கியம் என்பது சமூக மேம்பாட்டிற்காகவும், சிந்தனையைத் தட்டி எழுப்புவதற்காகவும் இருக்க வேண்டும். ஓர் இலக்கியத்தைப் படைக்கும் படைப்பாளன், அடிப்படையில் சாதாரண மனிதனாக இருக்கிறான். அவனுக்குள்ளும் சிக்கல்களும், பிரச்சனைகளும் இருக்கின்றன. தனி மனிதனுக்கு பிரச்சனைகள் வரும்போது அதனை எதிர்கொள்ளவும், எதிர்கொள்ள முடியாமல் விழவும், தவிக்கவும் செய்கின்றான்.

## உறவுமுறைகள்

### தனிமனிதன்

உண்மை நிலையோடு சமூகத்திற்கு தீங்கு விளைவிக்காத வண்ணம் மனிதன் இருக்கின்றன பொழுது, சமூகம் அத்தகைய போக்கில் அமையும், அதற்கு அடிப்படையாய் தனிமனிதனும், அவனின் ஒழுக்கம் சார்ந்த முறையும் அவசியமாகும். தனிமனிதன் என்பவன் மக்களிடத்தில் நன்மதிப்பை பெற்றுமக்களோடு இணைந்து பழகியும், உதவிகள் செய்தும் காணப்படவேண்டும். ஒரு தனிமனிதன் தாய்வழி குடும்பம் சார்ந்தும், தந்தை வழி குடும்பம் சார்ந்தும் காணப்படுவான். இருப்பினும் இவர்களில் பலர் திருமணம் என்ற கட்டுப்பாட்டுமுறையோடு இணைந்தும் இருப்பர். சிலர் திருமணமுறைக்கு அப்பாற்பட்டு காணப்படுவர்.

## குடும்பம்

தமிழ் மற்றும் மராத்தி சமூகத்தில் தாய்வழிக் குடும்பம், தந்தை வழிக்குடும்பம் என இரண்டு வகையான குடும்பமுறைகள் இன்றளவும் காணப்பட்டுவருகிறது. இச்சுழர்ச்சி காரணமாக குடும்ப உறவுமுறை தோன்றி சமூகம் என்ற அமைப்பு வளர்ந்து வருகின்றது. குடும்பம் வளர்ச்சியுற உறவுமுறைகளே முதற்கண் காரணமாகின்றது. இவ்வாறன குடும்பங்கள் தனிக்குடும்பம், கூட்டுக் குடும்பம் எனஇருவகையாக காணப்படுகிறன. பரந்து பட்ட உலகில் மனிதன் வேலையின் காரணமாக கூட்டுக் குடும்பத்தில் இருந்து தனிக்குடும்பமாக செல்ல நேருகிறது.

## சமயம்

சமயம் என்ற சொல் சமை என்ற அடிச்சொல்லிலிருந்து பிறந்ததாகும். இதற்கு மதம் எனவும் பொருள் உண்டு. தனிமனிதன் கடந்து உணர்த்தி நிற்கும் அண்டத்தை அல்லது ஒன்றை (கடவுள், இறைவன்) உணரும் வழிமுறையின் கட்டமைப் பேசமயம் ஆகும். சமயம் என்பது வாழ்வின் பல்வகைச் சூழ்நிலைக்கும், ஆன்மீக வளர்ச்சியின் பல்வேறு நிலைக்கும் ஏற்ப மனிதன் தன்நடத்தையை அமைத்துக்கொள்ள உதவியாய் அமைந்த ஒரு கருதுகோளாகும்.

“அரிய சமயம் ஒருகோடி” என்பர் அருணகிரிநாதர். எனவே கடவுள் மாறுபட்டாலும் வழிபடுதல் மூலம் நாம் பிறர் மீது அன்பு கொள்ளுதல் என்றும் பொருள் கொள்ளலாம். வழிபாட்டால் சிந்தித்து அறிவு வழியில் செல்லலாம் என்பதாகும். சமயம் பற்றியும், கடவுள் வழிபாடு பற்றியும் தமிழர்களிடத்தும் மராத்தியர்களிடத்தும் அதிகம் காணப்பட்டுவருகிறன.

தமிழகத்தில் இந்து, முஸ்லிம், கிருஸ்துவம் போன்ற மத அடிப்படையில் சமயம் காணப்படுகிறது. இருப்பினும் மு.வ மற்றும் ஜெயவந்த இவர்களின் நாவலில் இந்து சமயத்தை வைத்தே கதை அமைகின்றன. மு.வாவின் கதையில் செட்டி நாட்டு பழக்கவழக்கம் காணப்படுகிறது. பெறும்பாலும் தொழில் அடிப்படையில் ஏழை பணக்காரர் பாகுபாடும் காணப்பட்டது.

## சாதி

“இருட்டறையில் உள்ளதடா உலகம் சாதி

இருக்கின்ற தென்பானும் இருக்கின்றானே”-

ஆரியர் வருகைக்குப் பின்மனிதர்களை பிரித்தரிய சாதி உருவாக்கபட்டுள்ளது. இன்று சமூகத்தில் நிலவும் பலபிரச்சனைகளுக்கு தலையாக அமைவது சாதியக்கொடுமை. இருப்பினும் இன்றைய சூழலில்சாதி, மதம், இனம் இம்மூன்றும் மக்களிடையே மேலோங்கி, காணப்படுகிறது.

“நீர்வாழ் சாதியும் அவற்றுள் உள” என்பார் தொல்காப்பியர். ஆனால் சாதி என்ற சொல் அக்காலத்தில் அஃறிணையைக் குறிக்கப்பயன்படுத்தினர் இன்று மக்களிடையே தொழில் அளவில் சாதிக் கொடுமை தலைதூக்கி காணப்படுகின்றன. சாதிக்கொடுமை பற்றிய செய்திகள் தமிழகத்திலும், மராத்தியர்கள் மத்தியிலும் இன்றளவும் காணப்பட்டுவருகிறது. இருப்பினும் சாதிக்கொடுமையே நாளடைவில் ஏழை, பணக்காரர் என்ற பாகுபாடும் வளர்ச்சிடைய காரணமாய் இருந்தன.

## தெய்வங்கள்

மாதா, பிதா, குரு, தெய்வம் என்பதற் கேற்ப மனிதர்களிடையே தெய்வமும் முக்கிய இடம்பெறுகின்றன. ஒவ்வொரு மதத்தினரும் தங்கள் கடவுள்களை வழிபடுவதில் மாறுபட்டு காணப்படுவர். இருப்பினும் இருமாநிலத்திலும் தெய்வங்களை வழிபடுதல் என்பது மனிதர்களிடையே காலம்காலமாக பரவலாகக் காணப்படுகின்றன. நகர்புறம் மற்றும் கிராமப் புறங்களிலும் தெய்வங்கள் இன்றளவும் பராமரிக்கப்பட்டும், அதற்கான சடங்கு முறைகளை பின்பற்றியும் வழிபட்டுவருகின்றனர்.

## வழிபாடு

தமிழகத்தில் சிறுதெய்வ வழிபாடு, பெருதெய்வ வழிபாடு காணப்படுவது சிறப்பு வாய்ந்ததாகும். இங்கு பெரும்பாலும் ஆண்கள் மட்டுமே பணிபுரிகின்றனர். இறைவனுக்கு ஏற்றார் போல சமயமும் மாறுப்பட்டு காணப்படுகிறது.

மராத்தியர்களிடத்தில் கடவுள் நம்பிக்கை அதிகமாக காணப்படுகின்றன. மகாநந்தா கதையில் கடவுளுக்கா கதங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்துக் கொண்ட தேவதாசிகள் பற்றிய செய்திகள் அரியமுடிகிறது (Saraswathi Ramnath, 1932). இவர்கள் சமயம் சார்ந்த இந்து கோவில்களில் இறைவனுக்கு தேவையான அலங்காரங்கள் செய்வது, கோவிலை சுத்தம் செய்வது, மலர்களைக் கொண்டு தங்கள்கைகளினால் கட்டிய மலர் மாலையை இறைவனுக்குப் போடுவது போன்ற வேலைகளை செய்துவந்தனர். இருப்பினும் மராத்தியர்கள் இறைவனை வழிபடுவதில் அதிக ஆர்வம் கொண்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்க செய்தியாகும்.

## விழாக்கள்

விழா என்பதற்கு விழவு, சாறு, திருவிழா, பண்டிகை, நோன்பு, திருநாள், என்று வேறுபெயர்களாகச் சுட்டுவர். விழாக்கள் உடலுக்கு ஒய்வும், உள்ளத்திற்கு இன்பமும் தரவல்லன. எனவே மக்கள் விரும்பி ஏற்றுக்கொண்டாடுவதால் விழா என்று அழைக்கப்படுகிறது. விழா என்ற சொல்விழை என்ற சொல்லின் அடியாகத் தோன்றியது. இதற்கு விருப்பம், பற்று என்றும் பொருள் உண்டு.

"சாறு கொள் ஊரின் புகல்வேன் மன்ற" (Puliyur Kesigan, 2017)

என்ற சங்ககால குறுந்தொகை பாடலின்வழி சிற்றூர்களில் விழாக்கள் கொண்டாடின என்பது தெரியவருகிறது. மேலும் திருவிழாக் காலங்களில் கோவிலை அலங்கரிப்பதனால் ஏற்படும் மணம் எங்கும் பரவிகமழும் என்பதனை,

"விழவுக்காலம் என்பதனை, சேர்ப்ப" (Balasubramanian, 2007)

என்ற நற்றிணைப் பாடல்வழி அறியமுடிகிறது. விழாக்கள் பற்றிய செய்திகள் தமிழகத்திலும், மாரத்தியர்களிடமும் இன்றளவும் காணப்பட்டுவருகின்றது. உற்சவவிழா, இறைவனின் ஊர்வலம் (பல்லாக்கு), காப்புக்கட்டுதல், அலங்கரித்தல், மேலதாளமுழக்கம், நாடகம் நடத்துதல், மக்களின் திரள் போன்றவை இன்றளவும் இருசமூகத்திலும் காணப்பட்டுவருகின்றன.

## ஆடை அணிகலன்கள்

மனிதனின் அடிப்படைத் தேவைகளுள் இன்றியமையானது ஆடை என்பதாகும். ஆதலால் தான் ஆடையில்லாத மனிதன் அரைமனிதன் என்று குறிப்பிடுகின்றனர். மனிதனின் பண்பாட்டுச் சின்னமாக ஆடைவிளங்குகிறது. ஆனால் இன்றைய சூழலில் ஆடையும் அணிகலனும் ஒன்றாகவே உருவெடுத்து வளர்ந்து வருகின்றன.

அணி என்பதற்கு 'அழகு' என்பது பொருள். அணிகலன்கள் என்றால் பெண்கள் தங்களை மென்மேலும் அழகுப்படுத்துவதற்காக அணியக்கூடியதாகும். ஆனால் இன்றைய சூழலில் ஆண்களும் அணிந்து கொள்கின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும். தமிழ் மற்றும் மராத்தி சமூகத்தினரின் ஆடை அணிகலன்கள் முற்றிலும் மாறுபட்டு காணப்படுகின்றன.

"உண்ணுதல் தன்விருப்பத்திற் கேற்ப அமையலாம்

ஆனால் உடுத்துதல் பிறர் விருப்பத்திற் கேற்ப

அமைய வேண்டும்"

என்பது மக்களின் பொதுவான எண்ணமாகும். ஆடை அணிகலன்களில் தமிழர்கள் பண்பாடு மாறாதவர்களாகவும் நாகரீகத்தில் மேம்பாடு உடையவர்களாகவும் இருந்துவருகின்றனர். நாகரீகத்தில் உலக அளவில் தமிழர்களே முதன்மை உடையவர்கள் என்பது குறிப்பிடத்தக்க செய்தியாகும். இருப்பினும் இன்றைய காலசூழலில் அந்நியநாட்டு மோகத்தால் ஆடைகளும், அணிகலன்களும் மாறுபட்டுவருகின்றன.

மராத்தி சமூகத்தில ஆடை, அணிகலன் என்பது தமிழகத்தைவிட முற்றிலும் மாறுபட்டவையாகவே திகழ்கின்றன. மராத்தியர்கள் தங்கள் சமுதாயத்தின் அடிப்படையில் ஒவ்வொவரும் தனக்கென ஆடைகளை அணிவது வழக்கமாகும். இவர்கள் தங்களை அழகுபடுத்திக்கொள்ள ஆடை, அணிகலன்களைவிட அழகுசாதனப் பொருள்கள், கண்ணாடிவளையல்கள், ஆடைக்கேற்ப அணிகலன்கள், பொட்டு, காலணி போன்றவைகளை பயன்படுத்திவருகின்றனர். பெரும்பாலும், பருத்திஆடை, சீமை ஆடைகளை அணிவது வழக்கமாகும். இவர்கள் ஒவ்வொறு விழாவிற்கு ஏற்றார் போலதங்களின்ஆடை, அணிகலன்களை மாற்றிகொள்வார்கள். மராத்தியர்கள் 'ஜர்தாரி' புடவை அணிந்து கொள்வார்கள். ஆனால் தமிழகத்தில் 'பட்டாடை' அணிவது பரம்பரை பழக்கமாக இருந்து வருகிறது.

## உணவுமுறை

"வாழ்வதற்காக உண், உண்பதற்காக வாழாதே" என்னும் பழமொழிக்கேற்ப உணவுமுறை என்பது இடத்திற்கு இடம்நாட்டிற்குநாடு மாறக்கூடியவையாகும்.

"ஆற்றால் அறவறிந்து உண்க அஃதுடம்பு

பெற்றான் நெடிதுய்க்கும் ஆறு." (Kuzhanthai, 1949)

என்று வள்ளுவர். உணவு முறையைப் பற்றிதன் குறளில் அழகாக எடுத்துக்கூறுகிறார்.

இருவேறு சமுகத்திலும் உணவுமுறை முற்றிலும் மாறுபட்டவையாக காணப்படுகின்றன. தமிழகத்தில் மூன்றுமுறை உணவு உண்ணும் பழக்கம் இருந்துவருகிறது. அவ்வுணவாகதேநீர், சிற்றுண்டி, பலதரப்பட்ட சாப்பாடு, கிழங்குவகைகள், கீரைவகைகள், பயறுவகைகள், இறைச்சி, காய்கறிகள் போன்றவற்றை உணவாக உண்டுவருகின்றனர்.

மராத்தியர்கள் இருவேளை உணவு முறையை பின்பற்றிவந்தனர். இருப்பினும் காலப்போக்கில் மூன்று முறையாக உணவில் மாற்றம் கண்டுவருகின்றனர். காய்கறிகள், தேநீர், கீரைகள், மற்றும் ரொட்டிவகைகளை இவர்கள் அதிகம் உண்டு வருகின்றனர். அதிலும் "கோதுமை ரொட்டி" இவர்களின் அன்றாட உணவுகளில் முக்கிய பங்குவகுக்கிறது.

## புழங்கு பொருட்கள்

மக்கள் வாழ்வில் பயன்படுத்தபடும் அனைத்துப் பொருட்களும் புழங்கு பொருட்களாகும் தமிழ் மற்றும் மராத்தி சமூகத்தினர்களின் புழங்கு பொருட்கள் ஒற்றுமையாகவே காணப்படுகிறது. அவையாக புகைவண்டி, பேருந்து, மகிழ்வுந்து, மாட்டுவண்டி, மிதிவண்டி, பெட்டி, நாற்காலி, கூடை, பொம்மைகள், விளையாட்டுப் பொருட்கள், சமையல் பொருட்கள், ஆடை, அணிகலன்கள், இசைக்கருவிகள், வீட்டு உபயோகப் பொருட்கள் போன்றவைகளாகும். இருப்பினும் மண்ணால் செய்த பொருட்கள் தமிழக மக்களிடையே காணப்படும். ஆனால் மராத்தி மக்களிடையே இப்பொருள் காணப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## முடிவுரை

ஒரு குறிப்பிட்ட நிலப்பரப்பில் நீண்ட காலமாக ஒன்று சேர்ந்து வாழ்வதற்காக மக்கள் ஏற்படுத்திக்கொண்ட கூட்டமே சமூகம் எனப்படும். சமூகம் பற்றிய கருத்துக்களைஅறிஞர்கள் பலவாறு எடுத்துரைக்கின்றனர். இருப்பினும் அகராதியில் 'மக்கள்திரள்' என்பதே சமூகம் என்று கூறுகிறது. ஒரு

தனிமனிதன் உறவுமுறைகளின் காரணமாக குடும்பம் என்ற நிலைக்கு தள்ளப்படுகிறான் அவனின் குடும்பம் பெருகி ஒரு சமூகமாக மாறுவதற்கு வழிவகுக்கிறான் தொழில் அடிப்படையில் சமூகம் பிரிக்கப்பட்டு பல சமயத்தினராகவும், சமயம் சாதியாகவும் பிரிக்கப்பட்டு காணப்படுகிறது. தமிழ் மற்றும் மராத்தி மக்கள் கடவுளை வழிபடும்முறை, விழாக்கள் மக்களுக்கு எவ்வாறான இன்பத்தை தருகின்றன என்பதையும் இக்கட்டுரையில் கூறப்பட்டுள்ளது. மேலும் இருசமூகத்தினரும் பயன்படுத்திய ஆடை, அணிகலன்கள், உணவுமுறை, புழங்கு பொருட்கள் பற்றிய செய்திகள் மற்றும் ஒற்றுமை, வேற்றுமைகளையும் எடுத்துக்கூறியும் இக்கட்டுரை அமையப்பட்டுள்ளது. தமிழ் மற்றும் மராத்தி சமூகத்தினரிடையே காணப்படும் சமூக ஒற்றுமைகள், பழக்க வழக்கங்கள், தொழில்கள், சமயம், சாதி, தெய்வங்கள், வழிபாடு, விழாக்கள், ஆடை, அணிகலன்கள், உணவுமுறை, புழங்கு பொருள்கள் ஆகியன மக்களின் வாழ்க்கையில் எவ்வாரெல்லாம் பயன்படுத்தப்பட்டு வருகின்றன என்பதை இக்கட்டுரையின்வழி கண்டறியப்பட்டுள்ளது. மேலும் இருசமூகத்தினரும் ஓரிரு செயல்களில் ஒன்றுபட்டும் வேறுபட்டும் காணப்படுவதையும் இதன்வழி அறியமுடிகிறது.

## References


Aravanan, K.P. (2005) Tamizh Makkal Varalaru, Manavar Maru Thondri Achagam, Chennai, India

Balasubramanian, K.V. (2007) Natrinai (Moolamum Uraiyum), New Century Book House, Chennai, India.

Kuzhanthai, (1949) Thirukural, Poompuhar Pathippagam, Chennai, India

Puliyur Kesigan, (2017) Kurunthogai, Sri Senbaga Pathippgam, Chennai, India

Saraswathi Ramnath (1932) Mahananda, Ramnath Pathippgam, Chennai, India

Varadarajan, M. (1947) Kallo Kaaviyamo, Pari Nilayam, Chennai, India



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License